Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 28, 2025

வியாழக்கிழமை 28, ஒகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 038 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## "ஒரு நாட்டை ஆள மூளை போதும்"

"ஒரு நாட்டை ஆளத் தேவையான ஒரே விஷயம் மூளைதான்" என்று கூறிய கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் ருக்ஷன் பெல்லனா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றார்.

தொடர்ச்சி P2



### கச்சத்தீவு தீவு விவகாரம்

# நடிகர் விஜய்க்கு அமைச்சர் விஜித பதிலடி

கச்சத்தீவு தீவின் உரிமை தொடர்பாக இந்திய மத்திய அரசாலோ அல்லது இராஜதந்திர வழிகள் மூலமாகவோ எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், இன்று (27) மீண்டும் உறுதிப்படுத்தினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு, புதன்கிழமை (27) இடம்பெற்றது. அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவிலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தமானது. அது இலங்கைப் பிரதேசம், அது ஒருபோதும் மாறாது. தென்னிந்தியாவில் தற்போது தேர்தல் நடைபெற்று வருகின்றது. மேலும் வேட்பாளர்கள் பெரும்பாலும் வாக்குகளைப் பெறுவதற்காக அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். பிரச்சாரங்களின் போது இதுபோன்ற சொல்லாட்சிகள் வெளிப்படுவது இது முதல் முறை அல்ல, மேலும் அந்தக் கூற்றுக்கள் எதுவும் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை, "என்று அமைச்சர் ஹேரத் கூறினார்.

விஜயின் கருத்துக்களை அதிகாரப்பூர்வ நிலைப்பாட்டை விட அரசியல் சொல்லாட்சியாகப் பார்க்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். "இந்திய மத்திய அரசிடமிருந்தோ அல்லது இராஜதந்திர வழிகள் மூலமாகவோ எந்த மாற்றமும் இல்லை.

தொடர்ச்சி P2





## "வரிச் சலுகைகளை இன்னும் அவசியம்"

ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் (HDP) பணியாளர் குழும பிரதிநிதிகளுக்கும் (U.S. House Democracy Partnership-HDP) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று பாராளுமன்றத்தில் புதன்கிழமை (27) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

## தேசபந்துவுக்கு நிபந்தனை பிணை



காலி முகத்திடலில் அமைதிப் போராட்டக்காரர்கள் மீது 2022 மே மாதம் 9ஆம் திகதின்று நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் (டிஐஜி) தேசபந்து தென்னகோன் புதன்கிழமை (27) அன்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

## "வெலிக்கடை சிறை காணி ரணிலுடையது"




விளக்கமறியலில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர், ரணில் விக்கிரமசிங்கவை அழைத்துச் சென்ற வெலிக்கடை சிறைச்சாலை அமைந்திருக்கும் காணியின் அசல் உரிமையாளர்கள்,

தொடர்ச்சி P2



## ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு

# நோட்டீஸ்

இலங்கை குடிமக்களுக்கு டிஜிட்டல் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக இந்தியாவுடன் இலங்கை அரசு கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) இரத்து செய்ய உத்தரவிடக் கோரி முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச உள்ளிட்டோர் தாக்கல் செய்த இரண்டு மனுக்களை ஒக்டோபர் 17ஆம் திகதி விசாரிக்க உயர் நீதிமன்றம் , புதன்கிழமை (27) அன்று உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குமுதுனி விக்ரமசிங்க மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த மனுக்களை பரிசீலித்தது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன, மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ள அமைச்சரவை உறுப்பினர்கள் உட்பட பிரதிவாதிகளுக்கு எந்த நோட்டீஸும் கிடைக்கவில்லை என்று நீதிமன்றத்தின் கவனத்தக்கு கொண்டுவந்தார்.

தொடர்ச்சி P2





## ரணிலுக்கு பிணை: எட்டுபேரும் வெளியேறினர்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பாதுகாப்பு வழங்க நியமிக்கப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் எட்டுபேர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் இருந்து, செவ்வாய்க்கிழமை (26) அன்று வெளியேறியதாக கூறப்படுகிறது.

ரணில் விக்ரமசிங்கவுக்கு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் சரீரப்பிணை வழங்கிய பின்னர் அவர்கள் வெளியேறியுள்ளனர்.

தொடர்ச்சி P2



## டிப்பரின் சில்லுகள் நான்கும் கழன்று உருண்டோடின

கலேவெல-தம்புள்ளை பிரதான வீதியில், இப்பன்கட்டுவ எனுமிடத்தில் மீன் லொறி, மூன்று வாகனங்களுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இந்த பாரிய விபத்தில் டிப்பர் வாகனத்தில் பின்புற சில்லுகள் நான்கும் கழன்று ஓடிவிட்டன.

இவ்வாறு நான்கு சில்லுகளும் கழன்று ஓடிவிட்டமையால், அந்த டிப்பர் வீதியை விட்டு விலகி நின்று உள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

### ரணில் வழக்கு:

## வீதியை மறித்தவர்களை கைது செய்ய உத்தரவு



பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒரு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்திற்குள் நுழைய தடை விதிக்கும் வகையில் கூடியிருந்த நபர்களின் அடையாளத்தை வெளிபடுத்தி அவர்களை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு, செவ்வாய்க்கிழமை (26) அன்று உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## கிழங்கு, வெங்காய இறக்குமதி வரி உயர்வு

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் ஆகியவற்றின் மீதான விசேட பண்ட வரி செவ்வாய்க்கிழமை (26) முதல் உயர்த்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### ரணிலின் கைதுக்கு

## "இராஜதந்திர ரீதியாக ஆட்சேபனை இல்லை"

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பாக எந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளோ அல்லது இராஜதந்திர அமைப்புகளோ ஆட்சேபனைகளை தெரிவிக்கவில்லை என்று வெளிநாட்டு விவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## விபத்தில் மாணவிகள் இருவர் உட்பட மூவர் பலி

குளியாப்பிட்டி, நிலபொல பல்லேவெல பாலத்திற்கு அருகில் புதன்கிழமை (27) காலை இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவிகள் இருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். பாடசாலை மாணவர்களை ஏற்றிச்சென்ற வானின் சாரதியும் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நடிகர் விஜய்க்கு அமைச்சர் விஜித பதிலடி

கச்சத்தீவு இலங்கையின் ஒரு பகுதியாகவே நேற்று, இன்று, நாளையும் உள்ளது," என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் எட்டப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்து கேட்டபோது, அந்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் மதிப்பாய்வில் உள்ளன அந்த ஒப்பந்தங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது, மேலும் ஒரு ஆன்லைன் மனுவும் நடந்து வருகிறது. சட்ட செயல்முறை முடியும் வரை நாம் காத்திருக்க வேண்டும்," என்று அவர் கூறினார்.

## "வரிச் சலுகைகளை இன்னும் அவசியம்"

இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் திருமதி ஜூலி சங் அவர்களும் பங்கேற்றார்.

பொருளாதாரம் தொடர்பான பல முக்கிய விடயங்களை எடுத்துரைத்து இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 24 சதவீதமானவை அமெரிக்காவிற்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும், நாட்டின் மொத்த ஆடை ஏற்றுமதியில் சுமார் 63% ஆ சதவீதமானவை அமெரிக்காவிற்கே ஏற்றுமதி செயப்படுகின்றன என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த ஏற்றுமதிகள் நேரடியாக சுமார் 400,000 தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதோடு, இதனூடாக மறைமுகமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் பயனடைந்து வருகின்றனர். இலங்கையின் விநியோகச் சங்கிலி மற்றும் தொழிற்துறை அமெரிக்கச் சந்தையை அணுகுவதைக் கொண்டு பெரிதும் சார்ந்துள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

அண்மைய வரி குறைப்பு காரணமாக விகிதங்கள் குறைத்திருந்தாலும், ( 44 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாகவும், 30 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாகவும்) இலங்கை அதன் தற்போதைய வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமானால் இந்த வரிச் சலுகைகள் முக்கியமானவை என்று வர்த்தக தீர்வை வரி தொடர்பில் அவதானம் செலுத்தி எதிர்க்கட்சித் தலைவர் தனது கருத்தை தெரிவித்தார்.

அவ்வாறே, இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் நீண்டகாலமாக நிலவி வரும் நட்புறவு குறித்து கவனம் செலுத்திய சஜித் பிரேமதாச அரசியல், வணிகம், கல்வி மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்கள் மூலம் உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். ஜனநாயகம், சிந்திக்கும் சுதந்திரம், நட்புறவு பாராட்டும் சுதந்திரம், மத சுதந்திரம் மற்றும் பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்தல் ஆகியவற்றில் இரு நாடுகளும் பொதுவான உறுதிப்பாட்டால் பிணைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பில், அமெரிக்க தூதுக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, திரு. டெரெக் லுய்டன்(Executive Director, House Democracy Partnership), திரு. சேஸ் பபயார் (Majority Staff Lead, HDP), திரு. கோல்பி ஹெரிமன் (Minority Staff Lead, HDP), திரு. எரிக் அஷிடா (Professional Staff Member, U.S. House Foreign Affairs Committee (Minority), இலங்கையில் அமைந்துள்ள ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல்/பொருளாதார ஆலோசகர் திரு. அந்தோணி வி. பிர்னோட், ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகார அதிகாரிகளான ஆடம் மிச்செலோ மற்றும் நஸ்ரின் மரிக்கார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சித் திட்டங்கள் உட்பட, இலங்கை பாராளுமன்றத்துடன் எதிர்கால ஒத்துழைப்பை அடையாளம் காணல் மற்றும் இலங்கையில் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கோண்டு வரும் நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கக்கூடிய பரப்புகளை ஆராய்வதே அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஜனநாயக கூட்டாண்மை (HDP) பணிக்குழாமின் இலங்கை விஜயத்தின் முக்கிய நோக்கமாக அமைந்து காணப்படுகின்றன. மேலும், அமெரிக்கா மற்றும் இலங்கை இடையேயான வர்த்தகம், முதலீடு, பாராளுமன்ற பயிற்சி, திறன் விருத்தி மற்றும் பரந்த சமூக மற்றும் அரசியல் அபிவிருத்தி போன்ற துறைகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

## நோட்டீஸ்

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனிஷ்க விதாரண, வழக்கை பரிசீலிப்பதற்கான விரைவான திகதியைக் கோரினார்.

அதன்படி, பிரதிவாதிகளுக்கு மேலும் நோட்டீஸ் அனுப்ப மனுதாரரின் வழக்கறிஞர்களுக்கு அமர்வு அறிவுறுத்தியது.

மனுவை ஒக்டோபர் 17ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது.

இந்த மனுவில், ஜனாதிபதி, பிரதமர் ஹரிணி அமரசூரிய, டிஜிட்டல் பொருளாதார அமைச்சர் மற்றும் அமைச்சரவை உட்பட 31 நபர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## தேசபந்துவுக்கு நிபந்தனை பிணை

கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர, தலா 1 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளுடன் அவருக்கு பிணை வழங்கியதுடன், பயணத் தடையையும் விதித்தார்.

தும்பர சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தென்னக்கோன், ஸூம் மூலம் நீதிமன்ற விசாரணைகளை அவதானித்தார்.

இந்த வழக்கில் தென்னகோன் 33ஆவது சந்தேக நபர் அல்ல, 37ஆவது சந்தேக நபர் என்றும், 33ஆவது சந்தேக நபர் லியானாட் மெண்டிஸ் என்றும் நீதவான் மேலும் தெளிவுபடுத்தினார்.

## "வெலிக்கடை சிறை காணி ரணிலுடையது"

ரணில் விக்கிரமசிங்கவும் அவரது குடும்பத்தினரும் ஆவர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, ஊடகங்களுக்கு புதன்கிழமை (27) தெரிவித்தார்.

அந்த உண்மையை நிருபிக்கும் ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாக வஜிர அபேவர்தன கூறினார், மேலும் தொடர்புடைய உண்மையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை ஊடகங்களுக்கும் வழங்கினார்.

"ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட பிறகு, அவர் தனது குடும்பத்திற்குச் சொந்தமான அதாவது அவரது பாட்டிக்குச் சொந்தமான 43 ஏக்கரை கொண்ட வெலிக்கடை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார், இந்த நிலத்தின் அசல் உரிமையாளர்கள் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குடும்பத்தினர் ஆவார். அதுவும் ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும்" என்றார்.

வெலிக்கடை சிறைச்சாலை அமைந்துள்ள நிலத்தின் அனைத்து நிலப் பதிவுகளும் என்னிடம் உள்ளன. அத்தகைய தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் இதை எதிர்கொள்ள வேண்டியது மிகவும் சோகமான நடத்தை என்று சொல்ல வேண்டும்," என்றும் அபேவர்தன கூறினார்.

## "இராஜதந்திர ரீதியாக ஆட்சேபனை இல்லை"

அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை (27) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.




இந்த விஷயத்தில் பல்வேறு நபர்கள் வெவ்வேறு கருத்துக்களை தெரிவித்திருந்தாலும், அவற்றில் எதுவும் முக்கியமானது அல்ல என்றும் கூறினார்.

இலங்கையில் இப்போது சட்டத்தின் ஆட்சி நியாயமாகவும் சமமாகவும் பயன்படுத்தப்படுவதை சர்வதேச சமூகம் காண்கிறது என்றார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட அமலாக்கம் குறித்து கடந்த காலங்களில் கவலைகள் இருந்தபோதிலும், அத்தகைய பிரச்சினைகள் இப்போது தெளிவாகத் தெரியவில்லை என்று அமைச்சர் கூறினார்.

## கிழங்கு, வெங்காய இறக்குமதி வரி உயர்வு

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கான விசேட பண்ட வரி ஒரு கிலோவிற்கு 60 ரூபாயிலிருந்து 80 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கான வரி கிலோவிற்கு 10 ரூபாயில் இருந்து 50 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவினால் வெளியிடப்பட்ட இந்த திருத்தம், மூன்று மாதங்களுக்கு அமலில் இருக்கும்.



## வீதியை மறித்தவர்களை கைது செய்ய உத்தரவு

வழக்கு சார்பாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி திலீப பீரிஸ் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்டார்.

இங்கிலாந்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிற்கான தனிப்பட்ட பயணத்திற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிரான வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, ஒன்றரை நாட்களுக்கு 1.5 மில்லியன் ரூபாவிற்கு மேல் செலவழித்து அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தியதாக கூறப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, நீதிமன்றத்திற்குள் நுழைய தடை விதிக்கும் வகையில் பலரும் கூடியிருந்தனர்.

கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு செல்லும் நெடுஞ்சாலைகள் தடைபடும் வகையில் பல்வேறு நபர்களை ஒன்று திரட்ட ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழு நடவடிக்கை எடுத்ததாக சுட்டிக்காட்டி, வழக்குத் தொடுனர் தரப்பில் ஆஜரான மேலதிகா சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி திலீப பீரிஸ் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

## "ஒரு நாட்டை ஆள மூளை போதும்"

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த பிரதி பணிப்பாளர் டாக்டர் ருக்ஷன் பெல்லனா, மருத்துவமனையில் விக்கிரமசிங்க அனுமதிக்கப்பட்டதற்கு வழிவகுத்த சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றும், ஏனெனில் அது அவரது உடல்நிலையை சரியாக அடையாளம் காண அனுமதித்தது என்றார்.

"மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக, அவர் இப்போது சரியான சிகிச்சையைப் பெற்று இளமை வலிமையை மீண்டும் பெற முடியும்" என்று டாக்டர் பெல்லனா குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறினார், "எனக்குத் தெரிந்தவரை, அவருக்கு நடந்தது உண்மையில் ஒரு நல்ல விஷயம்." என்றார்.

## ரணிலுக்கு பிணை: எட்டுபேர் வெளியேறினர்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, கொழும்பு கோட்டை நீதவான் திருமதி நுலுபுலி லங்காபுர தலா ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள மூன்று சரீரப்பிணைகளில் விடுவித்தார்.

விளக்கமறியல் உத்தரவுக்குப் பின்னர், வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட ரணில் விக்ரமசிங்க, இன்னும் அங்கேயே சிகிச்சை பெற்று வருகிறார்.

## டிப்பரின் சில்லுகள் நான்கும் கழன்று உருண்டோடின

புதன்கிழமை (27) பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் மீன் லொறியின் சாரதி காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கலேவெல பகுதியில் இருந்து தம்புள்ளை பகுதியை நோக்கி மீன்களை ஏற்றிக்கொண்டு சிறிய ரக லொறி பயணித்துக் கொண்டிருந்துள்ளது.

இந்நிலையில், தம்புள்ளை பக்கத்தில் இருந்து கலேவெல பகுதியை நோக்கி மணல் ஏற்றிக்கொண்டு டிப்பர் வாகனம் பயணித்துக் கொண்டிருந்தது.

அந்த டிப்பர் வாகனத்தின் பின்புற சில்லுகள் நான்கும் கழன்று உருண்டோடியமையால், அந்த டிப்பர், வான் மற்றும் மற்றொரு லொறியுடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த மீன் லொறியின் ஓட்டுநர், உள்ளூர்வாசிகள் உதவியுடன் மீட்கப்பட்டு தம்புள்ளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளையில் இருந்து கலேவெல நோக்கி ஓட்டிச் சென்ற போது, எதிர் திசையில் இருந்து வந்த லொறி திடீரென வீதியின் நடுவில் வந்து மோதியதாக டிப்பர் லொறியின் ஓட்டுநர் கூறினார்.

## விபத்தில் மாணவிகள் இருவர் உட்பட மூவர் பலி

இவ் விபத்தில் காயமடைந்த 13 பேர் குளியாப்பிட்டிய மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாதம்பேயில் இருந்து குளியாப்பிட்டியை நோக்கி பயணித்த வானும், எதிர்திசையில் பயணித்த டிப்பரும் நேருக்கு நேர் மோதியே விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

டிப்பரின் சாரதியை கைது செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

## "ரணிலின் நோய்களை சொன்னவருக்கு ஒழுக்காற்று"

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைது செய்யப்பட்ட பின்னர் தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது அவரது உடல்நிலை குறித்து ஊடகங்களுக்கு அறிக்கைகளை வெளியிட்ட கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் ருக்ஷான் பெல்லனா மீது ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பதில் அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

ஓர் அரச அதிகாரியாகவும் மருத்துவ நெறிமுறைகளின்படியும், அவர் அவ்வாறு செய்ய முடியாது என்றும், குறிப்பாக ஒரு நோயாளியின் உடல்நிலை குறித்து மற்ற தரப்பினருக்கு தகவல்களை வெளியிடக்கூடாது என்றும் பதில் அமைச்சர் கூறினார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் புதன்கிழமை (27) நடைபெற்றது. அதனை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே பதில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதுபோன்ற அறிக்கைகளை வெளியிட பிரதி பணிப்பாளருக்கு உரிமை இல்லை என்றும், முன்னாள் ஜனாதிபதி அவரது பிரிவில் சிகிச்சை பெறவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

சிகிச்சைக்காக தேசிய மருத்துவமனைக்கு வரும் ஒவ்வொரு நோயாளியும் ஒரு நோயாளி என்றும், அந்த நோயாளி தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டதன் மூலம் பதில் பணிப்பாளர் தனக்குப் பொருத்தமற்ற ஒன்றைச் செய்துள்ளார் என்றும் அவர் கூறினார்.













# கலப்பு முறை முன்பள்ளி

நுவரெலியா மாவட்டத்திற்கான முதலாவது கலப்பு முறை முன்பள்ளியான The Kids, நுவரெலியா மாவட்டத்தின் பீட்ரு தோட்டத்தில் உத்தியோக பூர்வமாக வெள்ளிக்கிழமை (22) அன்று திறந்து வைக்கப்பட்டது.

களனி வெளி பெருந்தோட்ட நிறுவணம் மற்றும் மனித வள அபிவிருத்தி நிதியம் (Trust) ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் குமார் நடேஷன் கலந்து கொண்டார்.

இது மாணவர்களுக்கான வகுப்பறை கற்பித்தலுடன் இணைய வழி கற்பித்தலையும் மேற்கொள்ளப்படும் வகையில் உருவாக்கப்பட்ட 71ஆவது கலப்பு முறை பாடசாலை ஆகும். ஹேமாஸ் அவுட்ரிச் நிறுவனத்தின் அன்பளிப்பாக இப்பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. ஹேமாஸ் அவுட்ரிச் நிறுவனத்தால் நடத்தப்படும் 70 பாடசாலைகளில் 250 ஆசிரியர்களும் 4,000 மாணவர்களும் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

மலையக நிருபர்கள்

### போராட்டக்காரர்களை மிரட்டும்

# “தந்திரோபாயங்களை அரசாங்கம் கையாண்டது”



போராட்டத்தில் இணைந்து கொண்டவர்களை மிரட்டுவதற்கு அரசாங்கம் பல்வேறு தந்திரோபாயங்களை கையாண்டது என்று குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச. இதுபோன்ற அச்சுறுத்தல்களை எதிர்கொள்பவர்களுக்கு உடனடி சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு சட்டத்தரணிகள் குழாமொன்றை நிறுவ வேண்டும் என்றும் யோசனையை முன்வைத்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விடுதலைக்காக செயல்பட்ட அனைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நன்றி தெரிவிப்பு.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை (27) நடைபெற்ற எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சகல கட்சித் தலைவர்கள், சட்டத்தரணிகள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் இதற்காக இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நன்றி தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்குப் பின்னர் எழுந்த ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட சவாலை வெற்றி கொள்வதற்கு அனைத்துக் கட்சிகளுடனும் கூட்டிணைந்த, தொடர்ச்சியான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இதன் பிரகாரம், இக்குழாமை ஒருங்கிணைக்கும் பணிகளை முன்னெடுப்பதற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி பெயரிடப்பட்டார். அதேபோல், இந்த அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் உட்பட பரந்தபட்ட ஒன்றிணைவைக் கட்டியெழுப்பத் தேவையான ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கு முன்னாள் அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய ஆகியோர் பெயரிடப்பட்டனர்.

# 25 நாளாக தொடரும் ஆர்ப்பாட்டம்

■ எஸ்.ஆர்.லெம்பேட்




மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் புதன்கிழமை (27) அன்று 25 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் நானாட்டான் பிரதேச மக்கள் வருகை தந்து கலந்து கொண்டு தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தினர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது ஆர்ப்பாட்டம் தொடரும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

# கவனயீர்ப்பு ஊர்வலம்




■ க. அகரன்

வடக்கு கிழக்கு தமிழர் தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கம் புதன்கிழமை (27) காலை கவனயீர்ப்பு ஊர்வலத்தினை முன்னெடுத்தனர்.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வரும் அவர்கள் 3111 வது நாளான புதன்கிழமை (27) குறித்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

வவுனியா கந்தசாமி கோவிலில் தேங்காய் உடைத்து ஆரம்பமான இந்த ஊர்வலம் மணி கூட்டுச் சந்தி வழியாக ஏ9 வீதியை அடைந்து அவர்களுடைய ஆர்ப்பாட்ட பந்தலை வந்தடைந்திருந்தனர்.

அங்கு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் தமது ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்துள்ளனர்.

### தெஹிவளை

# துப்பாக்கி சூட்டில் இருவர் கைது

தெஹிவளை ரயில் நிலைய வீதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் புகுந்து கடந்த மாதம் 18 ஆம் திகதியன்று ஒருவரை சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பாக ஆண், பெண் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபரான ஆண் பொரலஸ்கமுவ பகுதியில் வைத்து ஐஸ் என்ற போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் குற்றத்திற்கு உதவிய பெண் கெஸ்பேவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சிறுமியை வன்புணர்ந்த வழக்கு

# 2 பிள்ளைகளின் தந்தைக்கு 12 ஆண்டுகள் சிறை தண்டனை

சிறுமி ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்ததாக இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனையுடன் கூடிய கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து ஹோமாகம மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க செவ்வாய்க்கிழமை (26) அன்று உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபருக்கு இருபதாயிரம் ரூபாய் நீதிமன்றக் கட்டணமாக செலுத்தவும், தவறினால் மேலும் ஆறு மாத சிறைத்தண்டனையும், பாதிக்கப்பட்டவருக்கு மூன்று இலட்சம் ரூபாய் இழப்பீடும் வழங்கவும், தவறினால் மேலும் ஒரு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வெல்லம்பிட்டியைச் சேர்ந்த சுதத் ரோஹண என்ற நபருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டது. கடுவலை, வெலிவிட்ட பகுதியைச் சேர்ந்த சிறுமியே பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.



### அதி நவீன அலைபேசிகளுடன்

# கொழும்பைச் சேர்ந்த இருவர் கைதாகினர்

■ டி.கே.ஜி. கபில

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியின்றி 10 கோடி ரூபாய் பெறுமதியுடைய அதிநவீன கைத்தொலை பேசிகளை நாட்டிற்குள் கொண்டு வந்த இருவர் புதன்கிழமை (27) அன்று கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற போது கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களான 24 வயதுடைய வர்த்தகர் மற்றும் 32 வயதுடைய தொழிற்சாலை மேற்பார்வையாளர் கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. சந்தேக நபர்கள் இலங்கை ஏர்லைன்ஸ் விமானம் மூலம் துபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளதுடன் அவர்களின் 3 பைகளில் இருந்து 955 அதி நவீன கைத்தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள், சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்தவுக்கு

# விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி நிஷாந்த செப்டம்பர் 10 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (27) அன்று உத்தரவிட்டுள்ளது.

பொதுஹெரவை பிரதேசத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில், நிஷாந்த உலுகேதென்ன கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.



# பிஞ்சுகளின் உயிர்களை பறிக்கும் நடுவீதிகள்

வீட்டைவிட்டு வெளியேறுவோர் திரும்பி வருவார்களா? என்ற பேரச்சம் ஒவ்வொரு மனிதரிடத்திலும் சூழ்கொண்டுள்ளது அந்தளவுக்கு வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. குளியாப்பிட்டி, நிலபொல பல்லேவெல பாலத்திற்கு அருகில் புதன்கிழமை (27) காலை இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவிகள் இருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

என்னதான், தேசிய விபத்து தடுப்பு வாரத்தை பிரகடனப்படுத்தி, விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி இருந்தாலும், விபத்துகளால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை. தேசிய விபத்து தடுப்பு வாரம் ஜூலை 7ஆம் திகதி முதல் ஜூலை 11 ஆம் திகதி வரையிலும் அமல்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் பெரும்பாலானவர்களில் விபத்துகளால் படுகாயமடைந்து அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன், வீதி விபத்துக்களால் கூடுதலான இறப்புகளும் அங்கவீனமடைவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

ஒவ்வொரு ஆண்டும், இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் ஏழு பேரில் ஒருவர் மருத்துவ கவனிப்பு தேவைப்படும் விபத்தின் அபாயத்தில் உள்ளனர், மேலும் ஒவ்வொரு நிமிடமும், குறைந்தது 6-8 இலங்கையர்கள் மருத்துவ கவனிப்பு தேவைப்படும் விபத்தின் அபாயத்தில் உள்ளனர் என்று அமைச்சும் கூறுகிறது.

விபத்துக்களைத் தடுப்பதில் அதிக கவனம் செலுத்துதல்,விபத்துக்களால் ஏற்படும் இறப்புகள் குறித்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், இவை இரண்டும் அடிப்படையாகும்.

விபத்துகளால் இறக்கும் மக்கள் குறித்து சமூகத்தில் உணர்திறன் குறைவு உள்ளது. இது சாத்தியமானாலும் கூட இது அவ்வாறு இல்லை என்பது வருந்தத்தக்கது. சுகாதார அமைச்சின் விபத்து தடுப்பு பணியகம் விபத்துகளைத் தடுப்பதற்கான முறையான திட்டத்தின் அவசியத்தைக் கடந்த காலங்களில் உணர்த்தியுள்ளது,

விபத்துக்களைத் தடுப்பதில் முறையான பயிற்சி இல்லாவிட்டாலும், விபத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் ஊடகங்கள் மூலம் தொலைதூரப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஏனெனில், பல விபத்துகளில், முதலில் சரியான சிகிச்சை பெற்றால் மரணம் கூட தடுக்கப்படலாம். இந்நிலையில், விபத்துகளில் சிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சிறுவர் வைத்தியரான பேராசிரியர் ருவந்தி பெரேரா தெரிவித்துள்ளார்.

“நம் நாட்டில் உள்ள தரவுகளைப் பார்க்கும்போது, விபத்துகளால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இவற்றில் பெரும்பாலான விபத்துக்கள் அறியாமை மற்றும் சோதனை செய்து பார்ப்பதன் ஊடாக இடம்பெறுகின்றது.

விபத்துகள் பல வடிவங்களில் வருகின்றன. 2 முதல் 3 வயது வரையிலான அறியாமையால் ஏற்படும் விபத்துகளாகும். அடுத்ததாக, 12-14 வயதுடையவர்கள் இளமைப் பருவத்தில் நுழையும் போது மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளால் ஏற்படும் ஆபத்துகளாகும்.

விபத்துகளைத் தடுப்பதற்காக சிறுவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியதன் அவசியமாகும், சிறுவர்களுக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்கு சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தினால், திடீர் விபத்துகளைத் தவிர்க்கலாம். அவற்றிலிருந்து ஏற்படும் உயிரிழப்புகளையும், அங்கவீனமடைந்தலையும் தவிர்க்கலாம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களை பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராளமனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என எராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும்போது. அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களை துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீயோர்களை களைவதில் தங்கியுள்ளது.

பருத்தியூர் பால.வைரவநாதன்

# ‘மிஸ்டர் கிளீன்’ இமேஜை சிதைக்கும் சதி

முருகானந்தன் தவம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது இலங்கை அரசியலில் கொதி நிலையை உருவாக்கியுள்ளதுடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி. பி.–என்.பி.பி. அரசாங்கத்திற்கு கடும் நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தி விட்டுள்ளது.அதுமட்டுமன்றி ஜே .வி.பி.–என்.பி.பி. அரசாங்கத்தின் ஆளுமைத்திறனையும் அரசியல் அனுபவத்தையும் மக்கள் நம்பிக்கையையும் கேள்விக்குட்படுத்தி அரசியல் பழிவாங்கலில் ஈடுபடும் ஒரு சாதாரண அரசாங்கமாகவே அருவருப்புடன் பார்க்க வைத்துள்ளது.

“சட்டம் அனைவருக்கும் சமம். முன்னாள் ஜனாதிபதியாகவிருந்தாலும் தவறு செய்திருந்தால் சட்டம் பாயும்”என ஜே .வி.பி.-என்.பி.பி.அரசாங்கம் பீற்றிக்கொண்டாலும் அவ்வாறு பீற்றிக்கொள்வதற்கு அவர்களுக்கு தகுதியுண்டா என்பது முதல் கேள்வி. ஏனெனில் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைவதற்குள்ளேயே இந்த அரசின் அமைச்சர்கள் சிலர் ஊழல்,மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளுக்குள்ளான நிலையில் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

ஜே .வி.பி.-என்.பி.பி.அரசாங்கம் அமைந்தவுடன் சபாநாயகராக நியமிக்கப்பட்ட அசோக சபுமல் ரன்வல நாட்டையும் மக்களையும் சொந்தக்கட்சியையும் ஏமாற்றி “போலி கலாநிதிப் பட்டம்”சமர்ப்பித்த நிலையில் அது அம்பலமாகி அவர் பதவி விலகியபோதும் அவர் மீது இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையும் அரசாங்கத்தினால் எடுக்கப்படவில்லை.

அதுமட்டுமன்றி ரில்லியன்,பில்லியன் கணக்கில் பண மோசடி செய்தவர்கள், கணக்கு வழக்கின்றி செலவு செய்தவர்கள், வெளிநாடுகளில் வைப்பிலிட்டவர்கள் என முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் பலர் இருக்கின்றனர்.கடந்த காலத்தில் ஊழல், மோசடி, லஞ்சம், கடத்தல், காணாமல் ஆக்குதல், படுகொலை செய்தல் இவ்வாறு பல்வேறுபட்ட குற்றங்களில் ஈடுபட்டவர்கள் பலர் வெளியில் சுதந்திரமாக இருக்கின்றனர் .இவர்கள் மீதும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

இவ்வாறானவர்களையெல்லாம் விட்டு விட்டு தனிப்பட்ட செலவு ஒன்றினை பொதுச் செலவாக காட்டி இருக்கின்றார் அதாவது அவரது மனைவியின் ஒரு பட்டமளிப்பு விழாவுக்கு பிரிட்டனுக்கு சென்ற போது அதற்காக ஒரு கோடியே 66 இலட்சம் ரூபா செலவு செய்திருக்கின்றார் என்பதற்காகவே முன்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டிருக்கின்றார். இந்த அற்பத்தனமான குற்றச் சாட்டில் “மிஸ்டர் கிளீன்” என அழைக்கப்படும் முன்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ததன் பின்னணியில் அரசியல் வன்மமும் அரசியல் பழிவாங்கலும் மட்டுமே உள்ளது.

பட்டலந்தை வதைமுகாம் சூத்திரதாரி, மத்தியவங்கி பிணைமுறி மோசடியில் தொடர்புபட்டவர் , உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை தடுக்கத் தவறியவர் என்ற குற்றம்சாட்டுகளுக்குள்ளான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அந்த குற்றச் சாட்டுக்கள் எவை தொடர்பிலும் கைது செய்யாது “ஒரு கோடியே 66 இலட்சம் ரூபா தனிப்பட்ட செலவு செலவு செய்திருக்கின்றார்” என்ற குற்றச்சாட்டில் கைது செய்தமை “மிஸ்டர் கிளீன்”என்ற அவரது இமேஜை உடைக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே இடம்பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மையில் குற்றம் செய்தவரா என்பதற்கான எந்த விளக்கம் கோரல்கள், எதுவுமின்றி அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் உத்தியோகபூர்வ பயணமாக அமெரிக்காவுக்கு சென்று திரும்பும் போது லண்டன் ஊடாக வந்த அவர் உத்தியோகபூர்வ அழைப்பொன்றை ஏற்று இங்கிலாந்து பல்கலைக்கழகமொன்றில் நடந்த பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டதுடன், பல்கலைக்கழக உபவேந்தரின் 25 வருட பூர்த்தி இராபோசன விருந்து நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டுள்ளார். இதற்கான ஆதராங்கள் இருக்கின்ற போதும், முறையான பொலிஸ் விசாரணைகள் இன்றி அந்த விசாரணைகள் முடிவு செய்யப்படாமல் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளார்.

> “பட்டலந்தை வதை முகாம் வழக்கு தொடர்பில் கைது செய்திருக்கலாமே என்ற கேள்விகள் எழும். அப்படி அந்த வழக்கில் கைது செய்தால் அது அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் எனக் கருதப்படும்

அத்துடன் வெள்ளிக்கிழமையில் திடீர் கைதை மேற்கொண்டுள்ளனர். வெள்ளிக்கிழமை கைது செய்தால் சனி ஞாயிறு தினங்களில் நீதிமன்றங்கள் செயற்படாது, ஆகவே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு இரு நாட்களுக்காவது சிறையில் இருக்க வேண்டும் என்று நன்கு திட்டமிட்டே வெள்ளிக்கிழமை ரணில் விக்கிரமசிங்கவை விசாரணைக்கு திகதி குறிப்பிட்டு அழைத்து கைது செய்து நீண்ட நேரத்தின் பின்னரே நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கும் திடீர் மின்தடையை ஏற்படுத்தி நீதிமன்ற நடவடிக்கையினை தாமதப்படுத்தி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்குவதனை தடுத்து விளக்கமறியலில் வைத்தனர்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் ஜே .வி.பி.-என்.பி.பி. அரசாங்கத்தில் ஜே .வி.பி.அமைச்சர்கள் மட்டுமே பெரிதாக வீராப்பு பேசிக்கொண்டிருக்கின்றனர் .என்.பி.பி. அணியினர் அடக்கியே வாசிக்கின்றனர்.இதனால்தான் ஜே .வி.பி.யின் பெலவத்தை தலைமையகத்தின் தேவைக்காகவே இந்தக் கைது இடம் பெற்றுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக ஒரு முன்னாள் ஜனாதிபதி கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி . ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்கப்பட்ட பின்னரே ஒரு கருத்து முன்வைத்துள்ளார். அதுவரையில் அவர் வாய் திறக்கவில்லை.

அதுமட்டுமல்ல முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச , மைத்திரி பால சிறிசேன , கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் மீதும் பல குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில் அவர்களையெல்லாம் விட்டு விட்டு ராஜபக்சக்களினால் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட நாட்டை மீட்டெடுத்த,அதன்மூலம் தற்போது ஜே .வி.பி. -என்.பி.பி. அரசாங்கம் பெரிதாக சிக்கலின்றி நாட்டை முன்னெடுத்தது செல்லக்கூடிய நிலையை ஏற்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்துள்ளமை பட்டலந்தை வதைமுகாமில் பலியான தமது தோழர்களுக்காக பழிதீர்க்கும் அரசாங்கத்தின் ஒரு நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகின்றது.

அப்படியானால் பட்டலந்தை வதை முகாம் வழக்கு தொடர்பில் கைது செய்திருக்கலாமே என்ற கேள்விகள் எழும். அப்படி அந்த வழக்கில் கைது செய்தால் அது அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் எனக் கருதப்படும் .உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் கைது செய்தால் தமது அண்டவாளங்களும் தண்டவாளம் ஏறி விடும், மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் கைது செய்ய முடியாது என்பதால்தான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அரச பணத்தை தனிப்பட்ட ரீதியில் செலவிட்ட குற்றச்சாட்டில் கைது செய்து அவரை அவமானப்படுத்தி பழி தீர்த்துள்ளனர்.

ஆக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளதன் மூலம் இலங்கை வரலாற்றில் முன்னாள் ஜனாதிபதி ஒருவரை சிறிய குற்றச்சாட்டுக்காகவே கைது செய்த அரசு என்ற வரலாற்று பதிவை ஜே .வி.பி.-என்.பி.பி.அரசு பதிவு செய்துள்ள நிலையில் அரச அதிகாரத்தை துஸ்பிரயோகம் செய்து அரசியலமைப்பு சர்வாதிகாரத்தின் மூலம் “மிஸ்டர் கிளீன்”என அரசியல் எதிரிகளினால் கூட மதிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து அரசியல் பழி தீர்த்த மோசமான ஓர் அரசாங்கம் என்ற வரலாற்று பதிவையும் ஜே .வி.பி.-என்.பி.பி.அரசாங்கம் பதிவு செய்துள்ளது.

## கடிதங்கள்

### “புனரமைத்து தாருங்கள்”

மஸ்கெலியா, போக்மோர் மற்றும் கல்கந்த தோட்டங்களுக்கு செல்லும் வீதி புனரமை க்கப்படாததால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வீதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் இல்லாததால், தொழிலாளர்கள் மற்றும் மாணவர்கள் பேருந்துக்காக சுமார் 8 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது. முச்சக்கர வண்டியில் செல்வதாக இருந்தால் 1,500 ரூபாய் வசூலிக்கப்படுவதாக மக்கள் கூறுகிறார்கள்.

தோட்டத்தில் வசிக்கும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயாளிகளை மஸ்கெலியா பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு வர சுமார் 18 கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளதுடன், மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ள சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். தற்போதைய அரசாங்கத்தின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் இது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காமினி பண்டார





## பாடசாலை மாணவர்களை தற்காலத்தில் நல்வழிப்படுத்த

# உளவள துறையின் அவசியம்



வி.கிருஷாந்தி,
உளவியல் துறை,
ஆம் வருட மாணவி,
யாழ் பல்கலைக்கழகம்.

தற்கால சமூக மாற்றங்களும், தொழில்நுட்ப வளர்ச்சியால் உருவாகும் புதிய சவால்களும், பாடசாலை மாணவர்களின் மனநலத்தின் மீது பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. கல்விச் சுமை, பெற்றோரின் எதிர்பார்ப்பு, சமூக வலைத்தளங்களின் பாவணை, போதைப்பொருள் பாவணை , சிறுவர் துஷ்பிரயோகம், வறுமை, நட்பு வட்டம் போன்றவை மாணவர்களை உளவியல் ரீதியாக பாதிக்கின்றன. இச்சிக்கல்களை திறமையாக கையாள்வதற்கும், மாணவர்களை நல்வழிப்படுத்துவதற்கும் இன்றைய நிலையில் உளவளத்துணை (Counseling) அவசியமான ஒன்றாக மாறியுள்ளது.

ஆரம்ப காலங்களில் counselling என்று சொன்னாலே அது பைத்தியக் காரர்களுக்கு வைத்தியம் பார்ப்பது, என மக்களிடம் ஒரு பரவலான எண்ணமே காணப்பட்டது. ஆனால், இன்று பல தடைகளை தாண்டி உளவளத்துணையானது, சமூக, கல்வி, குடும்ப, தொழில், குழந்தைகள் ஆகிய துறைகளில் பரந்து விரிந்து பல்வேறு உளவியல் உதவி முறைகளைக் கொண்டுள்ளது. பொதுவாக Counselling என்பது ஆலோசனை வழங்கல், ஆற்றுப்படுத்தல், நல்வழிப்படுத்தல் என்ற பல் பரிமானம் கொண்ட ஒரு உதவி செயன்முறை ஆகும். Carl Rogers என்பவர் 1951இல் வெளியிட்ட Client- Centered Therapy: its Current Practice, Implications and Theory எனும் நூலில், "உளவளத்துணை என்பது தனி நபரின் மனப்போக்கையும் நடத்தை முறையையும் மாற்ற உதவும் நேரடி தொடர்பாகும்" என கூறியுள்ளார்.

பொதுவாக பார்க்கும் போது, பிரச்சினைகளை தீர்க்க முடியாமல் இடர்படும் மக்களுக்கு தாமாகவே அப் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள தகுதியுள்ள ஒருவரினால் வழங்கப்படும் உளவியல் சார் உதவி counselling எனலாம்.

தற்போது மாணவர்கள் எதிர்கொள்கின்ற நவீன சவால்களுள் முக்கியமானதாக போதைப்பொருள் பாவணை உள்ளது. உதாரணமாக இலங்கையில் 2023இல் வெளியான சுகாதார அமைச்சின் அறிக்கை படி, பாடசாலை மாணவர்களில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. மாணவர்கள் சமூக அழுத்தங்களுக்கேற்ப பல வகையான போதைப் பொருள் பாவணைகளில் ஈடுபடுகின்றனர் என அறியப்பட்டுள்ளது. இது கல்வி மற்றும் உடல்நலம் ஆகியவற்றை கெடுக்கும் நிலைக்கு கொண்டு செல்கிறது .

Department of Probation and Child Care Services (2020) அறிக்கையில், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் குடும்பத் தகராறுகள் காரணமாக, பல மாணவர்கள் பாடசாலை படிப்பைத் தொடர முடியாமல், மன அழுத்தத்தில் சிக்கிக் கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகரித்த கல்விச் சுமை மற்றும் பரீட்சை பயம் என்பனவும் இவர்களது உள நலனை பாதிக்கிறது. கல்வியில் இன்று பெறும் போட்டி சூழல் காணப்படுகிறது, மேலும், பெற்றோர் மற்றும் சமூக எதிர்பார்ப்பு, தரநிலை சோதனைகள் ஆகியவை மாணவர்களில் பரீட்சைப் பயத்தையும் மன உளைச்சலையும் உருவாக்குகின்றன. இது கல்வி முயற்சியை பாதிப்பதோடு, மாணவர்கள் உடல் மற்றும் மனநலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மாணவர்களிடம் தொலைபேசி, இணைய பாவணை அதிகரித்தே செல்கிறது. இதனால் சமூக ஊடக அழுத்தங்களும் இவர்களுக்கு ஏற்படுகிறது. இணையவழி கொடுமைகள் (cyberbullying), 'likes' மற்றும் 'follow' போன்ற கருத்துகளை மையமாகக் கொண்ட ஒப்பீட்டுப் பண்பாடுகள், மாணவர்களில் மனச்சோர்வு மற்றும் தனிமை உணர்வை உருவாக்குகின்றன. UNICEF Sri Lanka (2022) ஆய்வில், 13–18 வயது மாணவர்களில் 36% பேர் 'சைபர் புல்லியிங்' அனுபவித்துள்ளனர். இது அவர்களிடம் மனச்சோர்வு, தனிமை உணர்வு, குறைந்த தன்னம்பிக்கை போன்ற விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இன்றைய AI தொழில்நுட்பம் மாணவர்களின் எண்ணங்களை தவறான வழியில் கொண்டு செல்கிறது. இன்றைய மாணவர்கள் ChatGPT ஐ காதல் செய்வது போன்ற சமூக விலகல் நடத்தையும் அதிகரித்துள்ளது.

இன்று கட்டிளமை பருவ மாணவர்கள் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சினை காதல் வசப்படல். இப் பருவத்தில் ஹோர்மோன்களின் செயற்பாட்டால் பாலின கவர்ச்சி மேல் எழும். இதன்போது, தகாத காதல் உறவுகளுக்குள் மாணவர்கள் சிக்கி அதிலிருந்து மீளமுடியாத நிலையில், உயிரை கூட மாய்த்துக் கொள்கின்றனர். மேலும், இது போன்ற பல காரணங்கள் மாணவர்களின் மன நலனை பாதிக்கின்றன. இதனால் இவர்களால் முறையாக கல்வி செயற்பாடுகளில் ஈடுபட முடியாது உள்ளது.

உளவள ஆலோசனை என்பது, மாணவர்களின் உணர்வுகள், சிந்தனைகள் மற்றும் நடத்தைகள் குறித்த புரிதலுக்கான அமைந்த பாங்கான சேவையாகும். இது மாணவரின் வளர்ச்சி, நலன் மற்றும் எதிர்காலத்தைத் தூண்டும் ஒழுங்கமைக்கப்பட்ட வழிகாட்டல் செயலாகும். இவ் உளவளத்துணை மூலம் மாணவர்களிடயே ஏற்பட கூடிய மாற்றங்கள்,

1. மனநல பாதுகாப்பு

மாணவர்களின் மனத்தாபங்கள், பயங்கள் மற்றும் பதட்டங்களை குறைப்பதில் ஆலோசகரின் பங்கு முக்கியமானது. ஆலோசனை பெறும் மாணவர், தனது உணர்வுகளை வெளிப்படுத்தும் வாய்ப்பு பெற்றால், மனச்சுமை குறையும்.

2. தன்னம்பிக்கை மற்றும் சுயமேம்பாடு

அவரது திறமைகள் மற்றும் தனித்தன்மைகளை அடையாளம் காண மாணவருக்கு உதவுகிறது. இது அவர் சுயமரியாதையுடன் வளர்ச்சியை நோக்கி நகர உதவுகிறது. ஆலோசனை பெற்ற மாணவர்கள் தங்களது திறமைகள் மற்றும் தனித்தன்மைகளை உணர்ந்து கல்வியில் சுறுசுறுப்பாகச் செயல்பட்டதாக Sri Lanka Journal of Social Sciences (2021) வெளியிட்ட ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

3. தவறான பழக்கங்களிலிருந்து நல் வழிநடத்தல்

போதைப் பொருள் பழக்கம், தீங்கு விளைவிக்கும் நட்பு, சமூக வலைத்தளக் கொடுமைகள், தவறான காதல் உறவுகள் போன்றவையிலிருந்து மாணவர்களைத் தவிர்க்கச் செய்யும் வழிகாட்டும் சேவையாக உளவள ஆலோசனை அமைகிறது.

4. கல்வி மேம்பாட்டிற்கு ஆதரவளித்தல்


அதிகமான பரீட்சை பயம், கவனச் சிதைவு, திறன் குறைபாடு போன்ற பிரச்சினைகளை கையாளும் உதவியாக, பாடசாலைகளில் உள்ள ஆலோசனையாளர்கள் செயற்படுகிறார்கள்.

5. பெற்றோர் மற்றும் ஆசிரியர் இடையிலான பாலமாக செயல்படுதல்

மாணவர்கள் பெற்றோர்களுடன் அல்லது ஆசிரியர்களுடன் உள்ள உணர்ச்சி முரண்பாடுகளுக்கு இடையில் இடை தரகராய் உளவள ஆலோசகர் அமைந்து, இருபுறத்திலும் புரிதலை ஏற்படுத்த உதவுவார்.

இவை தவிர மேலும் பல நன்மைகளும் உண்டு. குறிப்பாக 2022ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக உளவியல் பீடம் மேற்கொண்ட சமூக மனநல திட்டத்தில், வடமாகாண பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் மனநல ஆலோசனைகளில் பங்கேற்பதன் மூலம் தேர்வுப் பயம் மற்றும் தனிமை உணர்வு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்திருந்தது என கண்டறியப்பட்டுள்ளது. மேலும், கொழும்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களில் நடைமுறையில் உள்ள 'Psychosocial Support Programme for Schools' திட்டத்தின் கீழ், பயிற்சி பெற்ற ஆசிரியர் ஆலோசகர்கள் பாடசாலைகளில் உளவள ஆலோசனையை வழங்கி வருகின்றனர். இவ்வாறு இன்று பல அரச சார், அரச சார்பற்ற நிறுனங்கள் பலவும் உளவளத்துணை சேவையை வழங்கி வருகின்றன.

மாணவர்கள் எதிர்கொள்கின்ற உளவியல் சிக்கல்கள், அவர்களின் எதிர்காலத்தை வெகுவாக பாதிக்கக்கூடியவை. இன்று பல பாடசாலைகளிலும், வைத்தியச்சாலைகளிலும், மாவட்ட செயலாளர் அலுவலகங்களிலும் ( DS office), அரச சார்பற்ற அமைப்புகளிலும் ஏராளமான counselors சேவையில் உள்ளனர். எனவே, இந்த உளவளத்துணை சேவையை பெற மாணவர்களை வழிப்படுத்த வேண்டும், பாடசாலைகளில் தகுந்த பயிற்சியுடன் கூடிய உளவள ஆலோசகர் சேவை கட்டாயமாக இருக்க வேண்டும். இது மாணவர்களின் நலனுக்கும் அவர்களது ஆளுமை விருத்திக்கும், நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமையும். ஒரு மாணவர் மனதளவில் வலிமைபெறும் பொழுது, அவர் சமூகத்தையும் உயர்த்த வல்லவராவார். இதற்கான ஆரம்பக் கட்டமே மாணவர்களின் உள நிலை அறிந்து வழிகாட்டுவதாகும். எனவே, மாணவர்களின் நிலை அறிந்து அவர்களை ஊக்கவிக்க உளவளத்துணை சேவை பெற மாணவர்களை ஆற்றுப்படுத்துவது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கடமையாகும்.



# அலைபேசி போதை



பா.லோகேஸ்வரி,
உளவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இன்றைய கால கட்டத்தில் தொழில்நுட்பம் வேகமாக முன்னேறி வருகின்ற நிலையில், அலைபேசி மனித வாழ்வின் ஓர் அங்கமாக மாறியுள்ளது.

முதலில்அலைபேசி கண்டுபிடிக்கப்பட்ட போது, அது தூரத் தொடர்புக்காக மட்டுமே பயன்பட்டது. ஆனால் இன்று, ஸ்மார்ட் அலை பேசிகள் அறிமுகமானதிலிருந்து, தகவல் தொடர்பு மட்டுமின்றி, கல்வி, வணிகம், வங்கி, பொழுது போக்கு, சமூக ஊடகம், ஆரோக்கியம் போன்ற பல துறைகளிலும் அது ஒரு முக்கிய சாதனமாக திகழ்கின்றது. இது ஒருபக்கம், மனித வாழ்க்கையை எளிமையாக்கியுள்ளதுடன், மற்றொருபக்கம், சில சமூக விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

அலை பேசி, குறிப்பாக சமூக ஊடகங்கள் மற்றும் மெசேஜிங் செயலிகள், மனிதர்களுக்கு இடையிலான தொடர்பை வலுப்படுத்தியுள்ளது. அலை தூர உறவுகளை பராமரிக்கவும், பணிபுரியும் இடத்தில் தகவல்களை விரைவாக பரிமாறிக்கொள்ளவும் இது முக்கிய பங்காற்றுகின்றது. ஆனால், இதன் அடிக்கடி மற்றும் முறையற்ற பயன்பாடு, சமூக தனிமை, உணர்ச்சி சோர்வு, உறவுகளில் பகிர்வின்மை போன்ற பிரச்சினைகளையும் உருவாக்குகின்றது.

மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினர் அலைபேசியில் அதிக நேரத்தை செலவழிப்பது, அவர்கள் கல்வி, தூக்கம், உடற்பயிற்சி, நேரடிக் கலந்துரையாடல் திறன் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அதேவேளை, பெற்றோர்களின் கண்காணிப்பின்றி அலைபேசி பயன்பாடு, சிறுவர்களை பாலியல் சுரண்டல், ஆபத்தான இணைய நுணுக்கங்கள் போன்றவற்றுக்கும் ஆளாக்கும் அபாயம் உள்ளதாகவும் பல ஆய்வுகள் கூறுகின்றன.

மனநல ரீதியாக, அலைபேசி வழியாக கிடைக்கும் புகைப்படங்கள், வீடியோக்கள், புலனாய்வு தகவல்கள் போன்றவை, நபரின் மனநிலையை மாற்றும் சக்தியுடன் இருக்கின்றன. சமூக ஊடகங்களில் பிறருடன் ஒப்பீடு செய்து கொள்ளும் பழக்கம், மன அழுத்தம் மற்றும் குறைவான சுய மதிப்பீடு போன்ற உளவியல் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறாக, அலைபேசி பயன்பாட்டின் வளர்ச்சி நம்மை நவீன வாழ்க்கையின் உச்சத்துக்கு அழைத்துச் சென்றாலும், அதனை பயன்படுத்தும் விதமானது நம்முடைய வாழ்க்கை தரத்தை தீர்மானிக்கிறது. நேரம் மற்றும் நோக்கத்துடன், நியமனங்களுடன் அலைபேசியைப் பயன்படுத்தும் பழக்கம், நம் சமூக நலனுக்கும், மனநலத்திற்கும் உதவியாக அமையும். எனவே, விழிப்புடன், பொறுப்புடன், இந்த சாதனத்தை பயன்படுத்த வேண்டும் என்பதே காலத்தின் தேவை.

மேலும், அலைபேசி நம் நேரத்தை நிர்வகிக்கவும் திட்டமிடவும் உதவுகிறது. நினைவூட்டல்கள், நாட்காட்டி, குறிப்புகள், அலாரம் போன்ற வசதிகள் நம் அன்றாட வாழ்க்கையை ஒழுங்குபடுத்த உதவுகின்றன. மொபைல் வங்கி மற்றும் பண பரிமாற்ற செயலிகள் மூலம் நிதி பரிமாற்றமும் மிகவும் எளிமையாகியது.

இதனுடன், ஆளுமை மேம்பாடு, மொழி கற்றல், மன நலன், உறவு பராமரிப்பு ஆகிய பல துறைகளிலும் அலைபேசி முக்கிய பங்களிப்பை ஏற்படுத்தி வருகின்றது. எனவே, அலை பேசியின் பயன்பாடு நம் வாழ்க்கையை தன்னிறைவு மிக்கதாக மாற்றக்கூடியதாக உள்ளது. ஆனால், இதனை பொறுப்புடன் மற்றும் அளவோடு பயன்படுத்த வேண்டும் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இன்றைய டிஜிட்டல் யுகத்தில் தகவல் பரிமாற்றம், சமூக ஊடகங்கள், பொழுதுபோக்கு, கல்வி, தொழில் முதலியன அனைத்திலும் அலைபேசி முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால், இச்சாதனத்தின் பயன்பாடு, குறிப்பாகஅலைபேசி போதை (mobile addiction), மன நலத்திற்கு பலவிதமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது.

முதலில், அலை பேசியில் அதிக நேரம் செலவழிப்பது தூக்கநிலையை பெரிதும் பாதிக்கிறது. மக்கள் அதிகாலை வரை மொபைல் பயன்படுத்துவதால் தூக்கம் குறைகிறது. இது நாளடைவில் தூக்கமின்மை (insomnia), சோர்வு, மூளை சீரிழைப்பு போன்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கிறது. தூக்கம் குறைவதால் மனநிலை கவலைப்படுத்தும் அளவுக்கு பாதிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, சமூக ஊடகங்களில் நீண்ட நேரம் செலவழிப்பது தன்னம்பிக்கை குறைபாடுகளையும், பொறாமை உணர்வுகளையும் தூண்டக்கூடியது. மற்றவர்கள் வாழ்கின்ற வாழ்க்கையைப் பார்த்து ஒப்பீடு செய்வது காரணமாக, சிலர் தங்களையே குறைவாக எண்ண ஆரம்பிக்கின்றனர். இது மனச்சோர்வை (depression) ஏற்படுத்தக்கூடிய முக்கியமான உளவியல் காரணிகளில் ஒன்றாக கருதப்படுகிறது.

மூன்றாவதாக, அலை பேசியில் தொடர்ந்து செய்திகள், வீடியோக்கள், விளையாட்டுகள் போன்றவற்றை பயன்படுத்தும் போது, மனதில் ஓய்வில்லாத சிந்தனைகள் தோன்றுகின்றன. இதனால் மன அமைதி குலைகிறது. தொடர்ச்சியான மின்னணு வேதனைகள் மூளையை உளவியல் ரீதியாகவே பலவீனப்படுத்துகிறது.

நான்காவதாக, நேரடி சமூக உறவுகள் குறையும் போது, தனிமை உணர்வு அதிகரிக்கிறது. அலைபேசியில் அதிக நேரம் செலவழிக்கும் பழக்கம், குடும்ப உறவுகள், நண்பர்கள் மற்றும் சமூக உறவுகளில் ஈடுபடாமைக்கு வழிவகுக்கிறது. இது மன அழுத்தம், தனிமை உணர்வு, அழுத்த நிலை போன்ற பிரச்சனைகளை உருவாக்குகிறது.

அலைபேசி பயன் அளவோடு இருக்கும்போது, அது வாழ்க்கையை எளிமைப்படுத்தும். ஆனால், அதை தவறாக அல்லது அளவுக்கு மீறி பயன்படுத்தும்போது, மன நலனில் கடும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, அலைபேசி பயன்பாட்டில் கட்டுப்பாடு மற்றும் உணர்வுசார் விழிப்புணர்வு ஆகியவை மிக அவசியமானவை. மன நலனும்,அலைபேசி பயன்பாடும் சமநிலையுடன் செல்லும்போது தான் வாழ்க்கை நிறைவுமிக்கதாக அமையும்.

உறவுகளில் தொடர்ந்த தொடர்பு, அனுபவங்களின் பகிர்வு போன்றவற்றில் அலைபேசி முக்கிய பங்கு வகிக்கிறது. இருப்பினும், இந்த சாதனத்தின் பயன்பாடு எப்படி உள்ளதோ அதேபோல, உறவுகளிலும் அதன் தாக்கம் நேர்மறை மற்றும் எதிர்மறை ரீதியாக விளையக்கூடியது.

நேர்மறையாகப் பார்க்கும்போது, அன்றாட வாழ்வில் நேரடியாக சந்திக்க முடியாத நண்பர்கள், உறவினர்கள், வாழ்க்கை துணைகள் ஆகியோருடன் தொடர்ந்த தொடர்பை ஏற்படுத்துகிறது. இந்த வகையில், அலைபேசி உறவுகளின் இடைவெளியை குறைக்கும் பாலமாக செயல்படுகிறது.

ஆனால், எதிர்மறை விளைவுகளும் ஏராளமாக உள்ளன. குறிப்பாக, ஒரே வீட்டில் வாழும் உறவுகளுக்கு இடையில் நேரடி தொடர்பு குறையும் போது, உணர்ச்சி பிணைப்பு சீரழிகிறது. பல நேரங்களில், ஒருவருக்கொருவர் நேரம் ஒதுக்காமல் மொபைலில் மூழ்கி இருப்பது, தனிமையை அதிகரிக்கிறது. கணவன்-மனைவி உறவிலும் இது ஒரு முக்கிய பிரச்சினையாக பார்க்கப்படுகிறது. 'phubbing' எனப்படும் ஒருவரை தவிர்த்து மொபைலில் ஈடுபடுவது, மனவேதனை மற்றும் பகிர்வின்மை உருவாக்குகிறது.

இதேபோல், சமூக ஊடகங்களில் பகிரப்படும் விடயங்களை வைத்துக் கொண்டு, உண்மையான வாழ்க்கையை ஒப்பிட்டு, உறவுகளில் சந்தேகம், பொறாமை, துவேஷம் போன்றவை உருவாகும் அபாயமும் உண்டு. இது உறவுகளில் பிளவு ஏற்படக்கூடிய நிலையை உருவாக்குகிறது.

அலைபேசி என்பது மனித உறவுகளை மேம்படுத்தவும், மாறாக அவற்றை பலவீனப்படுத்தவும் காரணமாகும். இது எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதிலேயே அதன் பாதிப்பு இருக்கிறது. எனவே, நேரத்தை நேரடியாக பகிர்வது, உணர்வுகளை பேணுவது, உண்மையான உரையாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போன்ற முறைகள் தொடர்புகளை பாதுகாக்க உதவும்.

இவ்வாறு அலைபேசி மற்றும் உறவுகள் இடையே உள்ள தொடர்பு சரியாக புரிந்து கொள்ளப்பட்டால், இந்த சாதனம் உறவுகளை வளமாக்கும் கருவியாகவே அமையும்.

உளவியல் நோக்கில் பார்க்கும்போது, அலைபேசி பயன்பாடு மன அழுத்தம் (stress), மனச்சோர்வு (depression), குறைந்த செல்வாக்கு உணர்வு (low self-esteem), தூக்கமின்மை (insomnia), சஞ்சல நிலை (anxiety), கவனக் குறைபாடு (attention deficit) போன்ற பல மனநல பிரச்சினைகளுடன் தொடர்புடையது என்று ஆய்வுகள் கூறுகின்றன. குறிப்பாக, சமூக ஊடகங்கள், தொடர்ந்து வரும் அறிவிப்புகள் (notifications), பதிலளிக்க வேண்டிய பொறுப்பு உணர்வு ஆகியவை, மனதிற்கு ஓய்வளிக்காத நிலையை உருவாக்குகின்றன.

அலைபேசி மூலமாக நாம் தொடர்ந்து வெளி உலகத்துடன் தொடர்பில் இருப்பது போல தோன்றினாலும், உண்மையில் நம்முடைய உள்ளார்ந்த எண்ணங்களை நோக்கி செல்லும் சிந்தனைகளைத் தடுக்கும் வகையில் இது செயல்படுகிறது. இதனால், நம்மை நாமே அணுகுவதற்கான நேரமும், தியானம் போன்ற உள சுத்திகரிப்பு செயல்பாடுகளும் குறைகின்றன.

மீண்டும், 'FoMO' (Fear of Missing Out) எனப்படும் நிகழ்வுகளைத் தவறவிட்டுவிடலாம் என்ற பயம், தனிமை உணர்வு, மற்றும் நிரந்தர ஒப்பீடு மனப்பான்மைகளை உருவாக்குகிறது. மற்றவர்கள் வாழும் வாழ்க்கையை சமூக ஊடகங்கள் வழியாக காணும் போது, ஏற்படும் ஒப்பீடு மனநிலை, தனிமை உணர்வை மிகைப்படுத்தும். இது மனச்சோர்வுக்கு வழிவகுக்கும்.

அதே நேரத்தில், அலைபேசியில் அதிக நேரம் செலவழிப்பது தூக்கத்தில் பெரும் குறைபாடுகளை ஏற்படுத்துகிறது. 'blue light' எனப்படும் நீல ஒளி தூக்க ஹார்மோனான மெலட்டோனின் உற்பத்தியைத் தடை செய்கின்றது. இதன் விளைவாக தூக்கமின்மை ஏற்பட்டு, அடுத்த நாள் முழுக்க மனதளவில் சோர்வு மற்றும் கவனச்சிதறல் தோன்றுகின்றன.

உளவியல் கோணத்தில், அலை பேசியின் அடிமை நிலை (behavioral addiction) உருவாகும் போது, dopamine என்று அழைக்கப்படும் மகிழ்ச்சி ஹார்மோன் அளவில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. இது, உணர்ச்சி கட்டுப்பாடு, மனநிலை சீர்கேடுகள் மற்றும் பிணைபாடு குறைபாடு (attachment issues) போன்ற உளநிலைச் சிக்கல்களைத் தூண்டக்கூடியதாக அமைகிறது.

இதனால், அலைபேசி ஒரு சாதனமாக இருப்பதற்குப் பதில் நம்மை வழிநடத்தும் ஒரு ஆட்சி சக்தியாக மாறிவிடும் அபாயம் உள்ளது. இது தொடர்பாக விழிப்புணர்வு பெறுதல் மற்றும்அலைபேசி பயன்பாட்டில் கட்டுப்பாடு கடைப்பிடித்தல், உளநலத்தை பாதுகாக்கும் முக்கிய வழிகளாகக் காணப்படுகின்றன.

அலை பேசி நவீன வாழ்வியல் ஒரு அங்கமாக மாறியுள்ளதற்காக, அதன் பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்க முடியாது. ஆனால், அதன் பருமளவான மற்றும் கட்டுப்பாடற்ற பயன்பாடு, நமது உளநலத்திற்கு ஆபத்தான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியது என்பது மறுக்க முடியாத உண்மை. மன அழுத்தம், மனச்சோர்வு, தனிமை உணர்வு, தூக்கக் குறைபாடுகள், மற்றும் சமூக பிணைப்புகளில் நெருக்கடிகள் போன்றவை, அலை பேசியின் விளைவாக உருவாகும் உளவியல் சிக்கல்களாக காணப்படுகின்றன.

புதுடெல்லி

# “எதையும் தாங்குவோம்”

## அமெரிக்காவின் 50% வரிக்கு மோடி பதிலடி



“நாட்டில் உள்ள சிறு நிறுவனங்கள், விவசாயிகளை பாதுகாக்கும் விடயத்தில் எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் கவலையில்லை” என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியாக தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளுக்கு அதிகபட்ச வரி விதித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இந்தியாவுக்கு 25 சதவீத வரியை விதித்தார். உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதால், இந்தியாவுக்கு கூடுதலாக 25% வரியை அறிவித்து, இதற்கான உத்தரவில் செவ்வாய்கிழமை (26) அன்று ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

இதையடுத்து, அமெரிக்காவுக்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு மொத்தமாக 50 சதவீத வரி விதிக்கப்படும். இந்த நடைமுறை புதன்கிழமை (27) அன்று அமுலுக்கு வந்தது. இந்நிலையில், குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் செவ்வாய்க்கிழமை (26) அன்று நடைபெற்ற பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

அப்போது அவர் பேசியதாவது, உலகளவில் தற்போது பொருளாதார ரீதியாக அரசியல் செய்வதில் ஒவ்வொருவரும் பரபரப்பாக இருக்கின்றனர். ஆனால், அகமதாபாத் மண்ணில் இருந்து ஒன்று சொல்கிறேன். மகாத்மா காந்தியின் மண்ணில் இருந்து ஒன்று சொல்கிறேன்.

என்னுடைய சிறு நிறுவனங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள், சிறிய கடை வைத்துள்ள சகோதர, சகோதரிகள், சிறு விவசாய சகோதர, சகோதரிகள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு மீண்டும் மீண்டும் உறுதி அளிக்கிறேன். உங்களுடைய நலன், உணர்வுகள்தான் இந்த மோடிக்கு முதன்மையானது.

எனது நாட்டில் சிறு நிறுவனங்கள் வைத்திருப்பவர்கள், விவசாயிகளைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறேன். அதற்கு தடையாக எத்தனை நெருக்கடி வந்தாலும், அவர்களின் வாழ்வாதாரத்தை விட்டுத்தர மாட்டேன். அவர்களுக்கு சிறு கஷ்டம் வருவதை என்னுடைய தலைமையிலான அரசு பொறுத்துக் கொள்ளாது. எத்தனை நெருக்கடி வந்தாலும், அவற்றை தாங்கும் வலிமையை அதிகரித்து கொண்டே இருப்போம் என்றார்.



ஐ.பி.எல்லிருந்து

# அஷ்வின் ஓய்வு

இந்தியன் பிறீமியர் லீக்கிலிருந்து (ஐ.பி.எல்) இரவிச்சந்திரன் அஷ்வின் ஓய்வு பெற்றுள்ளார்.

எக்ஸில் புதன்கிழமை (27) அறிவிப்பை மேற்கொண்ட 38 வயதான அஷ்வின், பல்வேறு லீக்குகளை ஆராய ஆரம்பிக்கவுள்ளதாகக் கூறியுள்ளார்.

ஐ.பி.எல்லில் 187 விக்கெட்டுகளை அஷ்வின் கைப்பற்றியிருந்தார். இவ்வாண்டு சென்னை சுப்பர் கிங்ஸுக்குத் திரும்பியிருந்த அஷ்வின் ஒன்பது போட்டிகளிலே விளையாடி 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

ஜெய்ப்பூர்

கூகுள் மேப்பை பார்த்து சென்ற

# வேன் ஆற்றில் கவிழ்ந்தது

## ஒரே குடும்பத்தில் 4 பேர் பலி




ராஜஸ்தான் மாநிலத்தில் கூகுள் மேப் காட்டிய வழியை பின்பற்றி 9 பேரை ஏற்றி சென்ற வேன் ஆற்றில் கவிழந்ததில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மாயமான ஒருவரை தேடும் பணி தீவிரமாக நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சித்தோர்கரில் உள்ள கனகேடா கிராமத்தில் வசிக்கும் இந்தக் குடும்பத்தினர், பில்வாராவில் உள்ள சவாய் போஜ் கோவிலுக்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது குறித்து பொலிஸார் கூறியதாவது, கூகுள் மேப் காட்டிய வழிதடத்தில் சென்று ஒரு குடும்பத்தினர் விபத்தில் சிக்கினர். குறிப்பிட்ட அந்த வழித்தடத்தில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், கூகுள் மேப்பில் அது ‘அப்டேட்’ செய்யப்படவில்லை.



திருவனந்தபுரம்

கேரளாவில்

# மூளையை தின்னும் அமீபாவா

## 18 பேர் பாதிப்பு

கேரளாவில் மூளையை தின்னும் அமீபா எனப்படும் அமீபிக் மெனிங்கோ என்செபாலிடிஸ் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால், மாநிலம் முழுவதும் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த அம்மாநில முதல்வர் பினராயி விஜயன் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

திருவனந்தபுரம், கொல்லம், கோழிக்கோடு, வயநாடு மற்றும் மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் தற்போது 18 பேருக்கு மூளையை தின்னும் அமீபா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மட்டும் கேரளாவில் இதுவரை 41 பேருக்கு இந்த அமீபா பாதிப்பு கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, நீர் மூலம் பரவும் நோய்களை எதிர்த்துப் போராடுவதற்காக அரசாங்கம் ‘ஜலமான் ஜீவன்’ எனும் பிரசாரத்தைத் தொடங்கியுள்ளது. இந்த முயற்சியில் மாநில சுகாதாரத் துறை, உள்ளாட்சித் துறை, பொதுக் கல்வித் துறை மற்றும் ஹரித கேரளம் மிஷன் ஆகியவை இணைந்து செயல்படுகிறது.

கிணறுகள், சுத்தம் செய்யப்படாத தண்ணீர் தொட்டிகள், மாசுபட்ட குளங்கள் மற்றும் ஆறுகளில் இந்த வகை அமீபா இருப்பதை ஆய்வுகள் அடையாளம் கண்டுள்ளன. எனவே, ‘ஜலமான் ஜீவன்’ என்றபிரசாரத்தின் வெற்றியை உறுதி செய்வதில் உள்ளாட்சி அமைப்புகளின் தீவிர பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்க வேண்டும் என்று முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.



# மட்ரிட்டிலிருந்து வெளியேறும் செபலோஸ்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் மத்தியகளவீரரான டனி செபலோஸைக் கைச்சாத்திடுவதில் பிரெஞ்சு லீக் 1 கழகமான மர்ஸெய் ஆர்வமாயுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடனடிப்படையில் 29 வயதான செபலோஸைக் கைச்சாத்திடுவதோடு, பின்னர் நிரந்தரமாகக் கைச்சாத்திடுவது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

மட்ரிட்டுடன் இன்னும் இரண்டாண்டு ஒப்பந்தத்தை செபலோஸ் கொண்டுள்ள நிலையில் அவரை இவ்வாறு கைச்சாத்திடுவது கடினமாகக் காணப்படுகின்றது.

# சிற்றியிலிருந்து வெளியேறும் அகஞ்சி



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் பின்களவீரரான மனுவல் அகஞ்சியைக் கைச்சாத்திடுவதற்கான அணுகலை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான கிறிஸ்டல் பலஸ் மேற்கொண்டுள்ளது.

இப்பருவகாலத்தில் இரண்டு போட்டிகளிலும் 30 வயதான அகஞ்சி விளையாடியிருக்காத நிலையில் அவருக்காக 15 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை சிற்றி வேண்டுகிறது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பொருசியா டொட்டமுண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு சிற்றியில் அகஞ்சி இணைந்திருந்தார்.

துருக்கியக் கழகமான கலடசரே, ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயெர் லெவர்குசனும் அகஞ்சியைக் கைச்சாத்திட முயல்கிறமை குறிப்பிடத்தக்கது.



# ஸஸூலோவில் இணைந்த மட்டிச்

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஸஸூலோவில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முன்னாள் மத்தியகளவீரரான நெமஞ்சா மட்டிச் ஓராண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதாக அக்கழகம் செவ்வாய்க்கிழமை (26) தெரிவித்துள்ளது.

பிரெஞ்சு லீக் 1 கழகமான லயோனுடனான 37 வயதான மட்டிச்சின் ஒப்பந்தமானது இரு தரப்பு இணக்கத்துடன் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சியிலும் நீண்ட காலம் விளையாடியிருந்த மட்டிச், 2022-23 பருவகாலத்தில் இன்னொரு சீரி ஏ கழகமான றோமாவுக்காகவும் விளையாடியிருந்தார்.

மட்டிச்சின் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட அடைவுகள் அடைந்தால் தானாகவே இரண்டாவது பருவகாலத்துக்கு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுவதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.



# லெவர்குசனில் இணைந்த வஸ்கூஸ்

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயெர் லெவர்குசனில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் முன்னாள் அணித்தலைவரான லூகாஸ் வஸ்கூஸ் இணைந்துள்ளார்.

றியல் மட்ரிட்டுடனான தனது ஒப்பந்தம் முடிவடைந்த நிலையிலேயே பின்களவீரரான வஸ்கூஸ், லெவர்குசனுடன் இரண்டாண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

மட்ரிட்டில் 2015ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 34 வயதான வஸ்கூஸ் 402 போட்டிகளில் விளையாடியிருந்ததுடன், 5 சம்பியன்ஸ் லீக், 4 லா லிகா உட்பட 20 கிண்ணங்களை வென்றிருந்தார்.

வொஷிங்டன்

# “சீனாவை அழிக்கும் முடிவை என்னால் எடுக்க முடியும்”

## ஜனாதிபதி ட்ரம்ப் பரபரப்பு பேச்சு



சீனாவை அழிக்கும் முடிவை என்னால் எடுக்க முடியும். ஆனால், நாட்டை அழிக்க கூடிய நடவடிக்கைகளை நான் எடுக்க மாட்டேன் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெளிவுப்படுத்தினார்.

சீனாவுடன் ஒருபுறம் பேச்சுவார்த்தை நடந்து வரும் சூழலில், 6 இலட்சம் சீன மாணவர்களுக்கு ட்ரம்ப் அனுமதி அளித்து உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் தென்கொரிய ஜனாதிபதி லீ ஜே-மியுங்குடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது, செய்தியாளர்களிடம் பேசிய அவர், சீன மாணவர்களுக்கு அமெரிக்கா அனுமதி அளிக்க போவதில்லை என்பது போன்ற பல தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், சீன மாணவர்களை எங்களுடைய நாட்டுக்குள் வர நாங்கள் அனுமதிக்க போகிறோம். இது மிக முக்கியம். அமெரிக்க கல்லூரிகளில் அவர்கள் படிப்பார்கள். 6 இலட்சம் மாணவர்களை நாங்கள் அனுமதிக்க போகிறோம் என்பது முக்கிய விடயம். மேலும், சீனாவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம்.

அமெரிக்கா மற்றும் சீனா இடையேயான உறவுகளை பராமரிக்க இந்த முடிவு முக்கியம்.

அத்துடன், சீனாவை அழிக்கும் முடிவை என்னால் எடுக்க முடியும். ஆனால், நாட்டை அழிக்க கூடிய நடவடிக்கைகளை நான் எடுக்க மாட்டேன் என தெளிவுப்படுத்தினார். சீனாவுடன் வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சீனா, அமெரிக்கா இடையே மறைமுக வர்த்தக போர் நடந்து வந்தது. இரு நாடுகளும் பரஸ்பரம் கூடுதல் வரிகளை விதித்தன. இதனால், இறக்குமதி செய்யப்படும் பொருட்களை கூடுதல் விலை கொடுத்து வாங்கள் வேண்டிய கட்டாயத்தில் அந்நாடுகளின் மக்கள் தள்ளப்பட்டனர் என தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 28, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.